www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

FWC

**கிறிஸ்தவ நாகரிகம்**
**Christian Civilization**

| | | | | |
|---|---|---|---|---|
| Three Hours | 49 | T | I,II |
| Gr -12 (2023) | | | |

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. இயேசுவின் இறையாட்சி வாழ்வின் சிகர நிகழ்வாக அமைவது.
   1) போதனைகள், உவமைகள்
   2) இயேசுவின் விண்ணேற்றம்
   3) புதுமைகள், உவமைகள்
   4) திருத்தூதர்களை பணிக்கு தயார்செய்தல்
   5) இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு

02. தூய யோவான் நற்செய்தியின் படி சிலுவை மரணம் எதன் அடையாளமாகும்.
   1) இரக்கம்   2) அன்பு   3) இறையாட்சி   4) மன்னிப்பு   5) மீட்பு

03. நான்கு நற்செய்திகளிலும் காணப்படும் புதுமையாக விளங்குவது.
   1) ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்.
   2) இலாசரை உயிர்ப்பித்தல்.
   3) முடக்குவாத முற்றவரை குணப்படுத்துதல்.
   4) பார்வையற்றோருக்கு பார்வை அளித்தல்.
   5) பேய்களை ஓட்டுதல்.

04. இயேசுவின் பணித் தொடக்கத்திலேயே ஏரோதியருடன் இணைந்து அவரை ஒழித்துவிட சூழ்ச்சி செய்தவர்கள்.
   1) மறைநூல் அறிஞர்   2) சதுசேயர்   3) பரிசேயர்
   4) உரோமையர்   5) வரிதண்டுவோர்

05. யூதர்களால் பேசப்பட்ட அரமேய மொழி வழக்கில் "மானிட மகன்" என்பது குறித்து நிற்பது.
   1) மெசியா   2) அடிமை   3) அடியேன்   4) நானே அவர்   5) நானிருக்கிறேன்

06. தம்மைப் பின்பற்ற விரும்பும் சீடர்கள் இறையாட்சிக்காக துன்புறவும், மரணிக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்ற இயேசுவின் கூற்றுக்களுள் பொருத்தமற்றது.
   1) தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.
   2) அவர் வளரவும் நான் குறுகவும் வேண்டும்.
   3) நான் குடிக்கும் கிண்ணத்தில் உங்களால் குடிக்க முடியுமா?
   4) தலைமைப் பதவிகளையோ, முதலிடங்களையோ தேடக் கூடாது.
   5) பணிவிடை பெறுவதற்கல்ல பணிவிடை புரியவே வந்தார்.



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

07. A. எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தது.
B. நான் எழுதியது எழுதியதே என பிலாத்து அறிக்கையிடல்.
C. உன்னை விடுதலை செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு
D. மேலிருந்து அருளப்பட்டாலன்றி உம்மால் எதுவும் செய்ய இயலாது.
மேற்குறித்த கூற்றுக்களுள் இயேசுவின் சிலுவையில் குறிப்பிடப்பட்ட வார்த்தையுடன் தொடர்புடையவை.
1) AD 2) CD 3) BC 4) AB 5) AC

08. யூதர்கள் ஒருவர் ஒருவரைச் சந்திக்கும் போது கூறும் வாழ்த்து
1) சலோம் அல்லேகும் 2) சபாத் 3) ரோஷ் ஹ ஷனா
4) பாஸ்கா 5) ஹானுக்கா

09. படைவீரன் இயேசுவின் விலாவைக் குத்திய நிகழ்வின் மூலம் நிறைவேறிய இறைவாக்கு
1) தலைப்பேறு அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்
2) அதைத் தூக்கும் எவரும் காயமடைவது திண்ணம்
3) சிறியோர்க்கு எதிராக என் கையை ஓங்குவேன்.
4) தான் கண்ட காட்சியைக் குறித்து வெட்கமடைவான்.
5) எந்த எலும்பும் முறிபடாது.

10. "நீ என்னைக் கண்டதால் நம்பினாய் காணமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்ற கூற்றுடன் தொடர்புடைய திருத்தூதர்.
1) புனித யாக்கோபு 2) புனித பேதுரு 3) புனித தோமா
4) புனித யோவான் 5) புனித அந்திரேயா

11. யோவான் நற்செய்தியின் படி இயேசுவின் மரணத்திற்கு பொறுப்பானவர்கள்?
1) உரோமையர்கள் 2) யூதர்கள் 3) பரிசேயர்கள்
4) செலூட்ஸ் 5) எசேனியர்கள்

12. இயேசு கைது செய்யப்பட்ட இடம்
1) யோர்தான் 2) கெனசரேத் 3) பெத்சாய்தா
4) கெதரோன் 5) கப்பர்நாகூம்

13. மக்களைத் திருத்தூதர்களின் படிப்பினைக்கு செவிசாய்க்க தூண்டிய சம்பவம்
1) பேதுருவின் முதல் திருவுரை
2) பேதுரு பிறவி முடவனை குணமாக்கிய சம்பவம்
3) அனனியா, சபிரா சம்பவம்
4) திருத்தொண்டர்களின் தெரிவு
5) மத்தியாவின் தெரிவு

14. பேதுருவின் முதல் திருவுரையின் சாரம்சம்
A. இயேசு கடவுளின் தூதுவர்
B. யூதர்கள் இயேசுவை கழுமரத்தில் ஏற்றிக் கொன்றார்கள்.
C. இயேசுவே ஆண்டவராகிய மெசியா
D. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.
E. அதற்கு நாங்கள் சாட்சிகள்
சரியான கூற்றுக்கள்
1) ABCE 2) ABC 3) BCDE
4) ADE 5) ACE



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

15. தூய பவுலின் மூன்றாவது மறைத்தூதுப் பயணத்தில் யூத்திகு இளைஞனை உயிர்ப்பித்த இடம்.
    1) லிஸ்திரா    2) பிலிப்பி    3) பெரேயா
    4) துரோவா    5) எதேன்ஸ்

16. "கெனோசிஸ்" என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்.
    1) இயேசுவின் $2^{ம்}$ வருகை    2) வெறுமையாதல்    3) உயிர்த்தெழுதல்
    4) இறையருள்    4) ஆண்டவரின் நாள்

17. தூய பவுலின் தூதுரைப் பணிக்காலத்தில் பரத்தமை, விபசாரம், சிற்றின்ப கேளிக்கைகளுக்கு பெயர்போன இடமாக விளங்கியது.
    1) எதென்ஸ்    2) எபேசு    3) கொரிந்து
    4) பிலிப்பி    5) இக்கோனியா

18. திரு அவையின் முதற் பணியாளர்களிடம் எதிர்பார்த்த தகுதிகள்.
    1) நற்சான்று, தூய ஆவியின் அருளும் வல்லமையும்.
    2) நற்சான்று, பேச்சாற்றல்
    3) தலைமைத்துவம், பேச்சாற்றல்
    4) சேவை மனப்பாங்கு, மறை அறிவு
    5) தொண்டு செய்யும் திறன், இறை நம்பிக்கை

19. பரவசப் பேச்சு வரத்தை விட எது சிறந்தது எனப் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார்?
    1) ஞானம் நிறைந்த சொல்வளம்    2) வல்ல செயல் செய்யும் ஆற்றல்
    3) ஆவிக்குரியவற்றை பகுத்தறிதல்    4) இறைவாக்குரைக்கும் வரம்
    5) பரவசப் பேச்சை விளக்கும் திறன்

agaram.lk

20. தூய பவுலின் மறைசாட்சி மரணம் பற்றி எழுத்துக்கூறிய இறைவாக்கினர்.
    1) நாத்தான்    2) சிமியோன்    3) அபகூக்கு    4) மீக்கா    5) அகபு

(20x1 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

❖ **பகுதி (அ) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (ஆ) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி "அ"

01. 1) இயேசுவின் விலாவைக் குத்துதல் தொடர்பான பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளினை குறிப்பிடும் நூல்கள் இரண்டும் எவை? (2 புள்ளிகள்)
    2) இயேசு உயிர்த்து விட்டார் என்பதற்கு தூய யோவான் தரும் சான்றுகள் நான்கும் எவை? (4 புள்ளிகள்)
    3) யோவான் நற்செய்தியின் படி இயேசுவை சிலுவையில் அறையும் கருத்துக்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)
    4) இயேசு உயிர்த்த பின்பு மகதலா மரியாவுக்கு, சீடர்களுக்கு, தோமாவுக்கு தோன்றிய நிகழ்வுகள் குறித்து கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

02. 1) திரு அவையிலே முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள் நால்வரைத் தருக. (2 புள்ளிகள்)
2) தூய ஆவியின் வருகையைத் தொடர்ந்து திருத்தூதர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3) தொடக்க கால திரு அவையில் காணப்பட்ட பண்புகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)
4) தொடக்க திரு அவையின் வளர்ச்சிக்கு தூய பேதுருவின் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது என்பதை கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

03. 1) தூய பவுல் 3ம் தூதுரைப் பயணத்தில் சென்ற இடங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2) தூய பவுலின் சிறந்த கிறிஸ்தவ நம்பிக்கை தரும் சிந்தனைகள் நான்கினை எழுதுக. (4 புள்ளிகள்)
3) தூய பவுல் 2வது மறைதூதுப் பயணத்திலே எதிர் கொண்ட சவால்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)
4) தூய பவுல் குடும்ப வாழ்வு பற்றி எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிட்ட கணவன், மனைவி பிள்ளைகளுக்கான கடமைகள் குறித்து கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

## பகுதி - ‘ஆ’

04. அ) கி. பி முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீனா சமூகத்தில் காணப்பட்ட அரசியல், பொருளாதார நிலைமைகளை விளக்குக.
ஆ) எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப இன, மத வேறுபாடின்றி நாட்டு மக்கள் ஆற்றக் கூடிய செயற்பாடுகளை விளக்குக.

05. அ) மலைப்பொழிவில் காணப்படும் இறையரசின் மதிப்பீடுகள் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக.
ஆ) எமது நாட்டிலே போதையற்ற சமூகத்தினை உருவாக்குவதில் கிறிஸ்தவ மாணவன் என்ற வகையில் நீர் மேற்கொள்ளக் கூடிய விடயங்களை முன்வைத்து விபரிக்குக.

06. அ) பாலஸ்தீனா கிரேக்கரின் ஆட்சிக்குட்பட்டதனால் அங்கு ஏற்பட்ட விளைவுகளை விளக்குக.
ஆ) எமது நாட்டிலே பூகோளப் போட்டித்தன்மையால் செல்வாக்கு செலுத்திவரும் வெளிநாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட நாட்டு மக்களிடையே சமய, சமூக ஒற்றுமை அவசியம் என்பதை வலியுறுத்தி கருத்துரை தருக.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk